# மலேசியாவில் சைவநெறி இலக்கிய ஆய்வுகளில் புதிய பார்வை

# A New Perspective on Saivism Literary Studies in Malaysia

முனைவர் இரா. சீதா லட்சுமி இராதாகிருஷ்ணன் / DR. R. Seeta lechumi Ratha Krishnan[1]

Date of submission: 2023-12-14
Date of acceptance: 2023-12-21
Date of Publication: 2023-12-28
Corresponding author's Name: DR. R. Seeta lechumi Ratha Krishnan
Email: rseeta@um.edu.my

**Abstract**

Religion is the virtue of purifying souls. Religion can be said to be rooted wherever the sense of holiness appears. The way of worshipping Lord Shiva is called *Saivism*. Saivism is associated with Lord Shiva; God, who is the primary substance of the world, is given as the name of the ritual of worshiping clearly as 'Sivam'. Saivism is a religion based on knowledge. Many studies on this principle have been carried out in Malaysia. Almost all the studies touch upon elements of Saiva Siddhanta principles, trinity and salvation. In Malaysia the monotheistic doctrine of Saivism has long been held in high esteem by Hindus; It is being accepted. Therefore, the principle of monotheistic theory calls for extensive study of Saiva philosophical texts. University students have been carrying out considerable research in this field, and thus a collection of studies on Saivism carried out by Malaysian researchers to this day to date is provided as an appendix. In particular, the articles in the monthly journal '*Sivanarul*' of the '*Malaysia Saiva Samaya Peravai'* are pioneers in the study of monotheistic doctrine. The contents of these articles are presented through this paper, and therefore, this article addresses a new perspective on monotheistic doctrine among Malaysian researchers.

**Keywords:** Saivisme, Saivism Literary Studies, Saiva Siddhantha, Sivanarul, The Doctrine of Monotheisme

## முன்னுரை

சைவம் சிவனை முழுமுதற் கடவுளாகக் கொண்ட சமயமாகும் (திருமந்திரம், 1486). இஃது எப்பொழுது தோன்றியது, யாரால் தோற்றுவிக்கப்பட்டது என்று கூறமுடியாத வரலாற்றுப் பழமை வாய்ந்தது. இதன் தொன்மை சிந்துவெளி நாகரீகக் காலந்தொட்டே (கி.மு. 2500 1500) இருந்துள்ளது. இதற்கு ஆதாரமாக அவ்விடம் கிடைக்கப்பெற்ற சிவ முத்திரை திகழ்கின்றது (இராசேந்திரன், 2012, பக்.39). சிவனை முழுமுதற் கடவுளாக வழிபடுகின்ற சைவநெறியை உணர்த்துவது சைவ சித்தாந்தம் (மயில்வாகனம், 1998, பக்.3). சைவ சித்தாந்தத்தைத் தத்துவமாகக் கொண்டு விளங்குவது சித்தாந்த சைவம். இச்சைவம் இந்தியாவில் மட்டுமின்றி, மலேசியா, இலங்கை, சிங்கப்பூர் ஆகிய நாடுகளிலும் சிறந்து விளங்குகின்றது (தர்மலிங்கம், 2002, பக்.44). அவ்வகையில் மலேசிய திருநாட்டில் சைவநெறி

[1]The author is a senior lecturer in the Department of Indian Studies, University of Malaya, Kuala Lumpur, Malaysia. rseeta@um.edu.my

தழைத்தோங்கி வருவது குறிப்பிடத்தக்கது. மலேசியாவில் சைவநெறியை முன்னெடுத்துச் செல்வதில் பல இயக்கங்கள் செயல்பட்டு வருவதோடுமட்டுமல்லாமல், சைவநெறி தொடர்பான கருத்தரங்குகள், மாநாடுகள், ஆய்வுகள் ஆகியன அவ்வப்போது பலராலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அத்தகைய ஆய்வுகள் தற்போது ஒரு புதிய போக்கினைப் பின்பற்றி வருவதைக் காண முடிகின்றது. குறிப்பாக, மலேசிய சைவ சமயப் பேரவையின் 'சிவனருள்' மாத இதழ் இதற்கு முன்னோடியாக இருந்து வருவது உணரத்தக்கது.

## நோக்கம்

மலேசியாவில் சைவநெறி தொடர்பான இலக்கிய ஆய்வுகளில் புதிய போக்காக விளங்கக்கூடிய ஓரிறைக் கொள்கையை ஆராய்வதையே அடிப்படை நோக்கமாகக் கொண்டு இந்த ஆய்வுக்கட்டுரை அமைகின்றது. மலேசியாவில் சைவநெறி தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் தலைப்புகளைக் கண்ணோட்டமிடுகையில், மலேசியாவில் சைவநெறி அமைப்புகள், சைவநெறியில் புதிய பார்வை, சைவ சமயப் பேரவையின் தோற்றமும் வரலாறும், சிவனருள் மாதாந்திர ஆய்விதழ், சைவநெறி இலக்கிய ஆய்வுகளில் புதிய பார்வை, சிவனருள் சமய மாத இதழில் ஓரிறைக் கொள்கை முதலான சில ஆய்ந்தறியப்பட்டுள்ளன. இந்த ஆய்வுக்கட்டுரை நூலக ஆராய்ச்சி அடிப்படையில் அமைந்துள்ளது. இந்த ஆய்வின் முதன்மை நூலாக சைவ சமயம் சார்ந்த ஆராய்ச்சி நூல்கள் இடம்பெறுகின்றன. சைவ சமயம் பற்றிய ஆய்வு நூல்கள், கட்டுரைகள் மற்றும் அதன் தொடர்புடைய பல நூல்களையும் சிவனருள் மாத இதழில் வெளிவந்துள்ள கட்டுரைகளையும் ஆராய்ந்தறியும் வகையில் இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகின்றது.

## மலேசியாவில் சைவநெறி தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் தலைப்புகள்

மலேசியாவில் சைவநெறி தொடர்பாக இன்றளவும் (ஏப்ரல் 2023 வரை) மேற்கொள்ளப்பட்ட ஆய்வுத் தலைப்புகளின் தொகுப்பினை இக்கட்டுரையின் பின்னிணைப்பில் உள்ள அட்டவணைகளில் காணலாம். அவை, முனைவர் பட்டப்படிப்பு, முதுகலைப் பட்டப்படிப்பு, இளங்கலைப் பட்டப்படிப்பு, தமிழ்ப்பேராய்வு ஆய்விதழ் மற்றும் 1986ஆம் ஆண்டு, கோலாலம்பூரில் நடைப்பெற்ற இரண்டாம் அனைத்துலக சைவ சித்தாந்த மாநாட்டுக் கட்டுரைகளின் தலைப்புகள் என ஐந்து அட்டவணைகளில் தொகுத்தளிக்கப்பட்டுள்ளன. அன்மையக் காலமாகச் சைவநெறி தொடர்பான ஆய்வுகளுக்கு முன்னோடியாக விளங்குவது மலேசிய சைவநெறி அமைப்புகளுள் ஒன்றான சைவ சமயப் பேரவையின் 'சிவனருள்' மாத இதழ் ஆகும்.

## மலேசியாவில் சைவநெறி அமைப்புகள்

மலேசியாவில் சைவநெறியை மேலோங்கச் செய்வதற்கான அடித்தளம் மலேசிய அருள்நெறி திருக்கூட்டம் எனும் அமைப்பினால் ஆரம்பிக்கப்பட்டது. சைவ சித்தாந்தத்தில் புலமைப் பெற்ற இராமநாதன் செட்டியார் அவர்களால் 1954ஆம் ஆண்டு இத்திருக்கூட்டம் தோற்றுவிக்கப்பட்டது. இவரது தலைமையில் இத்திருக்கூட்டத்தின் நடவடிக்கையாகச் சைவநெறி சார்ந்த பல ஆய்வுக் கட்டுரைகள் படைக்கப்பட்டன. இவரை அடுத்து, சைவப்பெரியார் தான் ஸ்ரீ சோமசுந்தரம், முனைவர் தேவபூபதி நடராஜா மற்றும் முனைவர் திலகவதி முதலானோரின் வழிகாட்டுதலிலும் சைவநெறி சார்ந்த பல ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன; ஆய்வுக் கட்டுரைகள் வெளியிடப்பட்டன. இதன் சான்றாக 1986ஆம் ஆண்டு கோலாலம்பூரில் நடைபெற்ற இரண்டாம் அனைத்துலக சைவ சித்தாந்த மாநாட்டினைக் குறிப்பிடலாம். மலேசிய அருள்நெறி திருக்கூட்டத்துடன் இணைந்து மலாயாப் பல்கலைக்கழக இந்திய ஆய்வியல் துறை, மலாயா அருள்நெறி திருக்கூட்டம், சிலாங்கூர் மற்றும் கூட்டரசுப் பிரதேச சிலோன் சைவர்கள் சங்கம், கோலாலம்பூர் ஸ்ரீ மஹா மாரியம்மன் ஆலயம், மலேசிய இந்து சங்கம், கோலாலம்பூர் ஸ்ரீ தண்டாயுதபானி ஆலயம் ஆகிய அமைப்புகள் இம்மாநாட்டினை

வெற்றிகரமாக நடத்தி முடித்தன.

### சைவநெறியில் புதிய பார்வை 'ஓரிறைக் கொள்கை'

இதுவரை மேற்கொண்ட ஆய்வுகளைத் தவிர்த்து தற்போதைய ஆய்வுகளில் சைவநெறியில் புதிய போக்கினைக் காண முடிகின்றது. இவற்றில் ஓரிறைக் கொள்கை பற்றிய சிந்தனைக்கு முக்கியத்துவம் அளித்திருப்பதைக் கண்டறிய முடிகின்றது.

ஒருவன் முதன் முதலில் இந்துக் கோயில் ஒன்றுக்குச் செல்லும்போது, இந்து சமயத்தில் பல உச்சக் கடவுள்கள் உள்ளனர் என்ற ஒரு கருத்து எளிதில் ஏற்பட்டு விடக்கூடும். இஃது இயற்கையாக எழும் ஒரு யூகம்தான், ஏனெனில் பல சன்னிதிகளையும் திருவுருவங்களையும் ஒருவன் பார்க்க நேரிடுகிறது. இருப்பினும், இஃது உண்மை அல்ல. இந்துக்கள் பல தெய்வங்களை நம்பினாலும், எல்லாரும் ஒரே ஓர் உச்சப் பரம்பொருளை மட்டுமே ஏற்கின்றனர். இந்து மதத்தின் மிகப் பழைமையான மறைநூலான ரிக் வேதம் இந்த உண்மையை வெளிக்கொணரும் நோக்கில் அடிக்கடி சுட்டப்படுகின்றது. சைவ சமயம் சிவபெருமான் ஒருவரையே முழுமுதற் கடவுளாக ஏற்கின்றது (திலாஷினி இராஜகோபால், 2020, பக். 4546).

சைவ சமய அடியாருள் நால்வர் முன்னிலை பெறுவர். திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகியோர் சிவத்தைச் சிந்திப்போருக்கு வழி காட்ட வந்த அருளாளர்கள். இவர்களில் 'ஈறாய் முதல் ஒன்றாய்' (1.11.2) என்று திருஞானசம்பந்தரும் 'சென்றுநாம் சிறுதெய்வம் சேர்வோம் அல்லோம், சிவபெருமான் திருவடியே சேரப்பெற்றோம்' (6.98.5) என்று திருநாவுக்கரசரும் 'எந்தாய் உன்னையல்லால் இனி ஏத்த மாட்டேனே' (7.21.1) என்று சுந்தரரும் 'ஒருவன் என்னும் ஒருவன் காண்க' (8.3.43) என்று மாணிக்கவாசகரும் சிவபெருமானே முழுமுதல் பரம்பொருள் என்னும் கருத்தை நிறுவியுள்ளனர் (நாகப்பன் ஆறுமுகம், 2014). இப்புதிய போக்கிற்கு முன்னோடியாகத் திகழ்வது 'சிவனருள்' எனும் மாதாந்திர ஆய்விதழ் ஆகும். இது மலேசிய சைவ சமயப் பேரவையின் அருமுயற்சியாகும்.

### சைவ சமயப் பேரவையின் தோற்றமும் வரலாறும்

2001ஆம் ஆண்டில் மலேசிய சைவ சமயப் பேரவையை அமைப்பதற்கானச் செயல்திட்டம் தொடங்கியது. ஆனால், 2011 ஆம் ஆண்டில்தான் இந்தப் பேரவையை முறையாகப் பதிவு செய்ய முடிந்தது (மலேசிய சைவ சமயப் பேரவை, ஸீ.பீ). இப்பேரவை மாவட்டங்கள் வாரியாகச் சைவ சமய மன்றங்களைக் கொண்டுள்ளது. இப்பேரவை தோற்றுவிக்கப்பட்டதன் முக்கிய நோக்கங்கள் பின்வருமாறு:

i. சைவ சமயத்தைத் தனிபெரும் சமயமாக முன்னெடுத்தல்.

ii. இந்துக்களின் சமய வாழ்க்கையில் காணப்படும் அடிப்படையற்ற நம்பிக்கைகளை அகற்றி சைவ ஆகமங்கள், திருமுறைகள், மெய்கண்ட சாத்திரங்கள் வழியிலான சிந்தாந்த சைவத்தை வாழ்வியல் முறையாக்குதல் ('நம்பிக்கை கடந்த நல்லறிவு' நான்காம் உலக மாநாடு).

iii. ஒரு கடவுள் நெறியை மலேசிய இந்துக்களின் சமயநெறியாக்குதல்.

iv. தமிழில் வழிப்பாட்டை முறைப்படுத்துதல்.

இந்தக் கொள்கைகளைச் செயல்படுத்தும் நோக்கத்தில் 2012, 2014, 2016 மற்றும் 2018ஆம் ஆண்டுகளில் உலக சைவ சமய மாநாடுகள் நடத்தப்பட்டன. இம்மாநாடுகளில் சிவபெருமானின் ஓரிறைக் கொள்கையை வலியுறுத்தி பல ஆய்வுக்கட்டுரைகள் வழங்கப்பெற்றுள்ளன (நேர்காணல், முனைவர் நாகப்பன் ஆறுமுகம்).

சைவநெறியை மென்மேலும் தழைத்தோங்கச் செய்வதற்காகப் பல்வேறு நடவடிக்கைகளும் கீழ்க்காணும் வகையில் இப்பேரவையினால் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றது.

i. தமிழரின் சமய சடங்குகளைத்

திருமுறைகளைக் கொண்டு நடத்துதல். எ.கா. : புதுமனை புகுவிழா, திருமணம், பரிசம் போடுதல், நிச்சயதார்த்தம், சீமந்தம் (வளைக்காப்பு), குழந்தைக்குப் பெயரிடுதல் போன்றவற்றைத் திருமுறைகளைத் தமிழ்மறையாக ஓதி நடத்துதல்.

ii. தனிநிலை வழிபாடு (ஆன்மார்த்த பூசை), கூட்டு வழிபாடு ஆகியவற்றைத் திருமுறைகளைக் கொண்டு நடத்துதல்.

iii. சித்தாந்த மாணவருக்குச் சைவ தீக்கை வழங்குதல்.

iv. பதின்மவயது மாணவருக்குச் சைவநெறி முகாம்கள் நடத்துதல்.

v. பொதுமக்களுக்கான (இந்துக்களுக்கான) சிந்தாந்த சிந்தனைக்களம்.

இவ்வாறு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டாலும் இந்துக்களிடையே 'ஓரிறைக் கொள்கை' பற்றிய விதையை விதைப்பதற்கு மலேசிய சைவ சமயப் பேரவை என்றும் பின்வாங்கியதில்லை. அதன் மாதாந்திர ஆய்விதழான 'சிவனருள்' ஓரிறைக் கொள்கை பற்றிய பல கட்டுரைகளைத் தாங்கி மலர்கின்றது. இதன் மூலம், இக்கொள்கை பற்றிய விழிப்புணர்வு மக்களிடையே அதிகரித்து வருகின்றது என்பது கண்கூடு (நேர்காணல், முனைவர் நாகப்பன் ஆறுமுகம்).

## சிவனருள் மாதாந்திர ஆய்விதழ்

மலேசிய சைவ சமயப் பேரவையின் சிவநெறி வாழ்வியல் கொள்கைகளை மலேசிய இந்துக்களிடையே எடுத்துச்செல்லும் பொருட்டு 'சிவனருள்' என்னும் மாதாந்திர ஆய்விதழ் 2014ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு இன்றளவும் இடையறாது வெளிவருகின்றது. ஏப்ரல் மாதம் 2023ஆம் ஆண்டு வரை 98 இதழ்கள் வெளிவந்துள்ளன (நேர்காணல், முனைவர் நாகப்பன் ஆறுமுகம்). இதன் ஆசிரியர் ஐயா முனைவர் நாகப்பன் ஆறுமுகம் அவர்களாவர். சித்தாந்த சைவம், தாயுமானவர் பாடல்களில் சைவ சித்தாந்த கோட்பாடுகள், சித்தர், யோகி, ஞானி, குரு யார்?, சிவலிங்கம் ஒரு விளக்கம், கடவுள் உண்மை, சிவபுராணம் ஒரு விளக்கம் மற்றும் திருக்குறள் உரையாளரின் இறை மறுப்புக்கு மறுப்பு ஆகிய தலைப்புகளில் ஐயா அவர்கள் ஆய்வு நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார் (மலேசிய சைவ சமயப் பேரவை, ஸீ.பீ).

முனைவர் நாகப்பன் ஆறுமுகம் அவர்களின் சித்தாந்த அறிவும் அனுபவத்தின் மூலமும் இந்த மாத இதழ் திறம்பட வழிநடத்தப்பட்டு வருகின்றது. 'சிவனருள்' மாதாந்திர ஆய்விதழின் நோக்கம் பின்வருமாறு அமைந்துள்ளது:

i. சைவ சித்தாந்த உண்மைகளை எளிய முறையில் விளக்குதல்.

ii. திருமுறைகளில் காணப்படும் சித்தாந்த சிந்தனைகளைக் கண்டறிந்து உணர்த்துதல்.

iii. ஓரிறைக் கொள்கை குறித்த நால்வர் கூற்றுகளை எடுத்துரைத்தல்.

iv. சைவ சமயத்தை வாழ்வியல் முறையாகச் செயல்படுத்தும் நெறிகளை விளக்குதல்.

v. சைவ சித்தாந்த கோட்பாடுகளில் காணப்படும் அறிவியல் உண்மைகளை ஆராய்ந்து எதிர்காலச் சமய ஆய்வுக்கு வழிகாட்டியாக நிறுவுதல்.

(நேர்காணல், முனைவர் நாகப்பன் ஆறுமுகம்)

ஆக, இந்நோக்கங்களை அடைவதற்கான பெருமுயற்சியாக 'சிவனருள்' மாத இதழில் வெளிவரக்கூடிய கட்டுரைகள் சான்றாக அமைகின்றன என்பது வெள்ளிடைமலையாகும்.

## சைவநெறி இலக்கிய ஆய்வுகளில் புதிய பார்வை 'சிவனருள்' ஒரு கண்ணோட்டம்

'சிவனருள்' மாத இதழில் வெளிவரக்கூடிய கட்டுரைகள் ஒரு கடவுள் கொள்கையைப் பற்றிய விளக்கங்களை ஆதாரப்பூர்வமாக விவரிக்கின்றன. இக்கட்டுரைகள் பின்வரும் மாற்றங்களைக் கொண்டு வருவதற்கான முயற்சியில் தீவிரமாக இறங்கியுள்ளதைக் காண முடிகின்றது (நேர்காணல், முனைவர் நாகப்பன் ஆறுமுகம்).

i. இந்துக்களின் சமய வாழ்க்கையில் காணப்படும் நம்பிக்கை சார்ந்த கிரியைகளிலுள்ள குறைபாடுகளைச் சுட்டிக்காட்டி அவற்றை முறைப்படுத்தியுள்ள சைவ சான்றோரின் சிந்தனைகளை விளக்குதல்.

ii. பல தெய்வ வழிபாட்டு நெறியிலிருந்து ஒரு கடவுள் வழிபாட்டு நெறிக்கு வழிநடத்தும் சைவ நூல்களின் சான்றுகளை ஆராய்ந்து விளக்குதல்.

iii. தமிழில் வழிபாடு செய்வதற்குச் சித்தாந்த நூல்கள் காட்டும் நெறிகளை விளக்குதல்.

iv. சைவ இலக்கியங்களில் காணப்படும் நுண்பொருளை எடுத்துக்காட்டி அவற்றின் மீதிலான தொடர் ஆய்வுகளுக்கு வழிகாட்டுதல்.

v. தமிழ்க்காப்பு சித்தாந்த வகுப்புகள், சித்தாந்த / சைவ சமய உரைகள், திருமுறை பதிக ஆய்வுப் பயிற்சிகள், திருமுறை ஓதும் பயிற்சி, சமய இலக்கியப் பயிற்சிகள் ஆகியவற்றின்வழி மாணவரின் / ஆய்வாளரின் தமிழ் அறிவை வளப்படுத்தித் தமிழ் மொழித்திறனை மேம்படுத்துதல்.

இதன் மூலம், திருமுறைகளை அடிப்படையாகக் கொண்டு தமிழ் இலக்கண அறிவை மேம்படுத்த முடிகின்றது. திருமுறைகளை வைத்து இலக்கணம் போதித்தல்வழி தமிழ் இலக்கணப் பயிற்சிக்குத் திருமுறைகள் பாடப்பகுதிகளாக்கப்படுகின்றன. இது, வாசகர்கள் திருமுறையை அறிந்து கொள்வதோடு அதில் காணப்படும் இலக்கன அறிவையும் புரிந்து கொள்ள ஏதுவாகின்றது. உதாரணத்திற்கு, 'நமசிவாய வாஅழ்க' எனும் சொற்றொடர் உயிர் அளபடை ஆகும். திருமுறைகளின்வழி தமிழ் போதித்தல் வாசகர்களிடையே ஆர்வத்தினைத் தூண்டுவதோடு தமிழ்மொழி தொடர்ந்து பாதுகாக்கப்படுவதை உறுதி செய்கின்றது (நேர்காணல், முனைவர் நாகப்பன் ஆறுமுகம்).

## சிவனருள் சமய மாத இதழில் ஓரிறைக் கொள்கை பற்றிய சில கட்டுரைகள்

'சிவனருள்' மாதாந்திர ஆய்விதழில் வெளிவந்த பல கட்டுரைகளில் 'ஓரிறைக் கொள்கை' தொடர்பான சில கட்டுரைகள் தெரிவு செய்யப்பட்டு இங்கு விவரிக்கப்படுகின்றன. அதன் விபரங்கள் பின்வரும் அட்டவணையின்வழி அறிந்து கொள்ள முடிகின்றது.

**அட்டவணை 1 : 2015ஆம் ஆண்டு முதல் 2023ஆம் ஆண்டு வரை 'சிவனருள்' மாதாந்திர ஆய்விதழில் வெளிவந்த ஓரிறைக் கொள்கை பற்றிய கட்டுரைகளின் விபரம்**

| எண் | தலைப்பு | ஆய்வாளர் பெயர் | இதழ் | ஆண்டு |
|---|---|---|---|---|
| *1* | கடவுள் ஒருவரா? பலரா? | முனைவர் ஆ. ஆனந்தராசன் | *8* | *2015* |
| *2* | ஒரே கடவுள் | திரு. வி. கலியாணசுந்தரனார் | *10* | *2015* |
| *3* | கடவுளும் தெய்வமும் | தமிழரசி இராஜா | *11* | *2015* |
| *4* | நால்வர் போற்றிய ஒரு கடவுள் | முனைவர் நாகப்பன் ஆறுமுகம் | *15* | *2015* |
| *5* | பரம்பொருள் ஒன்றே | முனைவர் நாகப்பன் ஆறுமுகம் | *22* | *2016* |
| *6* | ஒன்றவன் தானே | முனைவர் நாகப்பன் ஆறுமுகம் | *37* | *2018* |
| *7* | பெரியவன் காண் அரியவன் காண் | கமலநாதன் முனுசாமி | *44* | *2018* |

| | | | | |
|---|---|---|---|---|
| 8 | திருவள்ளுவரின் ஓர் இறைக் கொள்கை | சுந்தரி அண்ணாமலை | 46 | 2018 |
| 9 | ஒரு கடவுள் வழிபாட்டினர் மதம் மாறுவதில்லை | முனைவர் நாகப்பன் ஆறுமுகம் | 52 | 2019 |
| 10 | நிகர் இல் இறை | முனைவர் நாகப்பன் ஆறுமுகம் | 57 | 2019 |
| 11 | சிவபெருமானே முக்தி தரும் கடவுள் | முனைவர் நாகப்பன் ஆறுமுகம் | 58 | 2019 |
| 12 | நெறியல்லா நெறி | முனைவர் நாகப்பன் ஆறுமுகம் | 73 | 2021 |
| 13 | வேண்ட முழுதும் தருகின்ற வேந்தன் | பூபாலன் பூவன் | 73 | 2021 |
| 14 | சிவமே பரம்பொருள் | பூபாலன் பூவன் | 76 | 2021 |
| 15 | உண்மைப் பொருள்; நன்மைப் பொருள் | அன்பரசன் அருணாசலம் | 78 | 2021 |
| 16 | சமயாதீதப் பழம்பொருள் | கமலநாதன் முனுசாமி | 83 | 2022 |
| 17 | சிவ பரத்துவம் | சிவநேசன் சிவலிங்கம் | 86 | 2022 |
| 18 | சிவன் இந்திய பெருநிலத்தின் கடவுள் | முனைவர் நாகப்பன் ஆறுமுகம் | 98 | 2023 |

*(ஆய்வுக் கட்டுரையின் பக்க அளவைக் கருத்தில் கொண்டு இங்குக் குறிப்பிடப்பட்டுள்ள 18 கட்டுரைகளுள் முதல் ஆறு கட்டுரைகளுக்கு மட்டுமே ஆய்வு விளக்கங்கள் வழங்கப்படுகின்றன.)*

'கடவுள் ஒருவரா? பலரா?' என்ற தலைப்பிலான கட்டுரையில் முனைவர் ஆ.ஆனந்தராசன் அவர்கள், கடவுளுக்கும் தெய்வங்களுக்கும் உள்ள வேறுபாட்டினை விளக்குகிறார். 'கடவுள் ஒருவரே; பலர் இல்லை' என்பதுதான் சித்தாந்தம். 'ஒருவன் என்னும் ஒருவன் காண்க' என்று திருவாசகம் கூறும். 'ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்' என்னும் திருமூலர் வாக்கு இதனைத் தெளிவிக்கும். ஒருவரே கடவுள் எனில், நூல்களில் பேசப்படுகின்ற பிற கடவுளரெல்லாம் யார்? பிற கடவுளரெல்லாம் (தெய்வங்கள்) பசுக்களாகிய உயிர் இனத்தவரே ஆவர். உயிர்களுக்குக் கடவுளால் பல வகைப் பிறவிகள் கொடுக்கப்படுகின்றன. அப்பிறவிகளுள் சிறந்த பிறவியாகக் கருதப்படுவது தேவர் அல்லது தெய்வம் என்பது. மிகுந்த புண்ணியம் செய்துள்ள உயிர்கள் கடவுளின் அருளால் தேவர் அல்லது தெய்வம் என்னும் பிறப்பு நிலையை அடைந்து அப்பதவியைப் பெற்று ஒவ்வொரு தொழிலை மட்டும் செய்வதற்கு உரியவராய் நின்று அந்தத் தொழிலைச் செய்வர் (சிவனருள் இதழ் 8, 2015, பக்.12) என்று ஆசிரியர் விளக்கமளித்துள்ளார்.

'ஒரே கடவுள்' என்ற தலைப்பில் திரு. வி. கலியாணசுந்தரனார் கட்டுரையைப் படைத்துள்ளார். இதில் சிவபெருமான் ஒருவரே கடவுள் என்ற கருத்தினை ஆணித்தரமாக நிறுவுகிறார். 'தென்னாடுடைய சிவனே போற்றி! எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி!" என்ற திருவாசகத்தின் பொருள் யாதெனில் தென்னாடுடைய சிவன் எந்நாட்டவர்க்கும் இறைவன் என்பதாகும். எந்நாட்டுக்கும் இறைவன் ஒருவனே. அவ்வொருவனுக்குப் பல நாட்டு மொழிகளில் பல பெயர்கள் வழங்கப்படுகின்றன. அப்பன்மைப் பெயர்கள் பெரிதும் அந்நாட்டின் இயற்கை நிலையை ஒட்டிப் பிறந்திருத்தல் வேண்டும். பெயர் பல கொண்டு கடவுளர் பலர் என்னும் முடிவுக்கு வருதல் அறியாமை (சிவனருள், இதழ் 10, 2015, பக்.4) என்கிறார் கட்டுரையாளர்.

'கடவுளும் தெய்வமும்' என்ற தலைப்பில் தமிழரசி இராஜா அவர்கள் கடவுளுக்கும் தெய்வத்திற்கும் உள்ள வேறுபாட்டினை விளக்கி எழுதியுள்ளார். முழுமுதல் கடவுள் ஒன்றே. அவர் ஏகன். கடவுள் உயிர்களின் பொருட்டு உலகங்களையும் உடல்களையும் படைக்கின்றார். பின், காத்தல், அழித்தல், அருளல், மறைத்தல் என ஐந்தொழிலையும் செய்கிறார். பல பிறவிகள் பிறக்கும் உயிர்கள் திருவருளை உணரும் போது, முக்தியும் தருகின்றார். கடவுளுக்கு, ஆகமங்களும் தோத்திரங்களும் உள்ளன. அறுபத்து மூவர் ஒரு கடவுள் நெறியில் வாழ்ந்து வழிகாட்டி உள்ளனர். கடவுள் எண்குணங்களை உடையவர். தன்வயத்தன், இயற்கை அறிவினன், முற்றறிவினன், மலமற்றவன், தூய உடம்பினன், பேராற்றல் உடைமை, பெருங்கருணை உடமை, இன்ப வடிவினன் என்பது இறைவனுக்கு உரிய குணங்களாகும். ஆனால், தெய்வத்திற்கு இக்குணங்கள் இல்லை. தெய்வங்கள் பிறக்கும்; இறக்கும். நம்மைப் போல் தாய் வயிற்றில் பிறந்தவை. வினைப்பயனால் மீண்டும் பிறவிகள் எடுக்கும். தெய்வத்தால் உலகம், உடலினைப் படைக்க முடியாது; ஐந்தொழில் ஆற்ற இயலாது; தெய்வங்களுக்கு முறையான ஆகமங்கள் இல்லை; தெய்வங்கள் கோப குணமுடையவை; கோபத்தினைத் தணிக்க உயிர்பலி கொடுப்பர். இந்த நம்பிக்கையே சிறுதெய்வ வழிபாட்டிற்கு அடித்தளமாக மாறியது (சிவனருள் இதழ் 11, 2015, பக். 11) எனும் கருத்துகளை முன்வைத்துள்ளார் ஆசிரியர்.

முனைவர் நாகப்பன் ஆறுமுகம் அவர்கள் எழுதிய 'பரம்பொருள் ஒன்றே' என்ற கட்டுரையில் சைவம் ஒரு கடவுள் கொள்கையைக் கொண்டது என்பதை நிறுவியுள்ளார். ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே சிவனது பரத்துவநிலை உணரப்பட்டது.'பிறவா யாக்கை பெரியோன்' என்றார் இளங்கோவடிகள். 'தனக்குவமை இல்லாதான்' என்றார் திருவள்ளுவர். 'ஒன்றவன் தானே' என்றார் திருமூலர். 'ஈறாய் முதல் ஒன்றாய்' என்றார் திருஞானசம்பந்தர்.

'ஈறிலாதவன் ஈசன் ஒருவனே' என்றார் திருநாவுக்கரசர். 'ஒருவன் என்னும் ஒருவன் காண்க' என்றார் மாணிக்கவாசகர். மேலும், 'கேடு ஒன்று இலான் கிளை இலான்' என்றும் கூறுகிறார். கிளை, 'உறவு' என்னும் பொருள் தரும். கிளை இலான் என்றதால் சிவபெருமானுக்கு உறவுகள் என்று யாருமே இல்லை என்பதை உணர வேண்டும் (சிவனருள் இதழ் 22, 2016, பக், 3) என்பது கட்டுரையாளரின் கருத்தாக விளங்குகின்றது.

'நால்வர் போற்றிய ஒரு கடவுள்' என்ற கட்டுரையில் நால்வர் பெருமக்கள் ஒரு கடவுள் கொள்கையைக் கொண்டவர்கள் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. நால்வர் பெருமக்கள் அனைவரும் நாம் காணுகின்ற காட்சிகளில் எல்லாம் ஒரே நேர்வரிசையில் நின்று அருளும் வண்ணம் இருப்பர். சந்நிதியில் உருவமாக எழுந்தருளி ஒரே வரிசையாய் எவ்வாறு நின்றனரோ, அதே போன்று உள்ளத்திலும் ஒன்றையே நிலை நிறுத்தினர். நால்வரும் முதன் முதலில் பாடத் தொடங்கும் போதே சிவபெருமானையே பரம்பொருளாக உணர்ந்து ஓதியுள்ளனர் (சிவனருள் இதழ் 25, 2015, பக்.12) என்கிறார் முனைவர் நாகப்பன் ஆறுமுகம்.

திருமந்திரம் எனும் நூலில் கடவுள் வாழ்த்து எனப்படும் பொதுப் பாயிரம், சிவபெருமான் எட்டு நிலைகளில் வெளிப்பட்டு உயிர்களுக்கு அருள் செய்யும் சிறப்பைத் திருமூலர் தொகுத்து வழங்கியுள்ளதை 'ஒன்றவன் தானே' என்ற கட்டுரையில் முனைவர் நாகப்பன் ஆறுமுகம் அவர்கள் குறிப்பிட்டுள்ளார். சிவபெருமானே பரம்பொருள், அவருக்கு மேல் இன்னொரு கடவுளோ, பரம்பொருளோ இல்லை. பரம்பொருள் என்றால் 'இனம், மதம், நாடு, உலகம் முதலியன கடந்து அனைத்து உயிர்களுக்கும் தலைமைக் கொண்ட கடவுள்' என்று பொருள். சைவ சமயம் சிவபெருமானைச் 'சமயாதீதப் பழம்பொருள்' என்று குறிப்பிடுவதால் எவ்வுலகில் வாழும் உயிர்களுக்கும் சிவபெருமானே கடவுள் ஆவார். உயிர்களுக்கான உடல், உலகங்களைப் படைத்துத் தருபவனும் முற்றழிப்பின்போது அனைத்தையும் அழித்துத் தான்மட்டும் நிலைத்து நிற்பவரும் சிவபெருமான் ஒருவரே.

இதனை 'ஒன்றே அவன்' என்றார் திருமூலர்; ஒன்றுக்கு மேல் இன்னொன்று இல்லை என்பதை ஒன்றே என்னும் ஏகாரத்தால் அறுதியிட்டுக் கூறினார்; ஒன்றாகியவன் யார் என்று கேட்டுக் கொண்டு அவன் சிவன் என்றார் (சிவனருள் இதழ் 37, 2018, பக்.1). இதனையே முனைவர் நாகப்பன் ஆறுமுகம் தமது கட்டுரையின்வழி எடுத்தியம்பியுள்ளார். இதே போக்கில் 'சிவனருள்' மாத இதழின் பிற கட்டுரைகளும் ஓரிறையைக் கொள்கையை நிலைநிறுத்தி விளக்கப்படுத்தியுள்ளது கற்றுணரத்தக்கது.

**முடிவுரை**

சைவ இலக்கியங்களைத் தமிழரின் சமயம், பண்பாடு, வாழ்க்கைமுறை ஆகியவற்றுக்கான அடித்தளமாகத் இந்துக்கள் ஏற்க வேண்டும். தமிழரின் வாழ்வியல் தெளிவடைவதோடு அறிவுசார்ந்த சமயத்தையும் இதன்வழி கண்டெடுக்க முடியும். நம்பிக்கை சார்ந்த சமய வாழ்க்கையிலிருந்து சமயக்குரவர் நால்வர் காட்டிய அறிவுசார்ந்த சமய வாழ்க்கைக்குத் தமிழ்ச்சமுதாயம் திரும்ப வேண்டும் என்பது ஆய்வாளரின் துணிபு. இவையே மலேசியாவில் சைவநெறி இலக்கிய ஆய்வுகளில் ஓரிறைக் கொள்கை பற்றிய புதிய போக்கு முழுமைப்பெறுவதற்கு மலேசிய ஆய்வாளர்கள் சிந்தனையில் கொள்ளத்தக்க வேண்டியவையாகும்.

## References


Darmalingam, N., et al. (2005). *Intu Camayam Ārampappaḷḷi*. Kuala Lumpur: Persatuan Hindu Universiti Malaya.

*International Saiva Siddhanta Seminar* (1986: Kuala Lumpur). Edited by: Nadarajah, Devapoopathy & Jayaraman, N. V. : Kuala Lumpur: Dunia Enterprises.

Mayilvaganam, R. (1997). *Caiva Cittānta Kainūl*. Colombo: Uni Arts Private Limited.

Nagappan Arumugam. (2014, July). *Vēṇṭum Oru Kaṭavuḷ!.* Malaysiakini. https://malaysiaindru.my/111299/comment-page-5.

Punitha, K. (2006). *Malēciya Aruḷneṟi Tirukkūṭṭam: Ōr Āyvu*. Academic exercise (B.A.). University of Malaya.

Rajantheran, M., Sillalee.K & Viknarasa. (2012). *Intu Camayam Ōr Aṟimukam*. (Teks Pelajar Agama Hindu). Petaling Jaya: Malaysia Hindu Sangam.

Tilashini, R. (2020). *Civaṉaruḷ Camaya Māta Itaḻ Pulappaṭuttum Camayac Cintaṉaikaḷiṉ Putiya Pōkkukaḷ: Ōr Āyvu.* Academic exercise (B.A.). University of Malaya.

மலேசிய சைவ சமயப் பேரவை (n.d). Retrieved from https://saivaperavai.org/v1/ta/home/

__________. (2018). *Kaṭavuḷ Oṉṟē.* Downloaded on May 1, 2023 from https://saivanarpani.org/home/index.php/2018/02/19/samayam-kaduraikal-saivasidhantham-kadavul_onre/.

__________. (2018). *Paramporuḷ Oṉṟē.* Downloaded on May 1, 2023 from https://saivanarpani.org/home/index.php/2018/03/04/paramporul-onre/.

## பின்னிணைப்பு

**மலேசியாவில் சைவநெறி தொடர்பாக இன்றளவும் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் விவரங்கள்**

**அட்டவணை 1: மலேசியாவில் சைவநெறி தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட முனைவர் பட்டப்படிப்புப் பற்றிய தலைப்புகளின் விவரம்**

| எண் | தலைப்பு | ஆய்வாளர் பெயர் | ஆண்டு | பல்கலைக்கழகம் |
|---|---|---|---|---|
| 1 | பெரியபுராணத்தில் சைவ சித்தாந்தம் : ஓர் ஆய்வு | கந்தசாமி நல்லுசாமி | 1993 | மலாயாப் பல்கலைக்கழகம் |
| 2 | திருவிசைப்பாவில் சைவ சித்தாந்தம் : ஓர் ஆய்வு | சீதா லட்சுமி இராதாகிருஷ்ணன் | 2011 | மலாயாப் பல்கலைக்கழகம் |
| 3 | சுந்தரர் தேவாரத்தில் சைவ சித்தாந்தம் | கோவிந்தன் மருதை | 2021 | சுல்தான் இட்ரிசு கல்வியியல் பல்கலைக்கழகம் |

**அட்டவணை 2: மலேசியாவில் சைவநெறி தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட முதுகலை பட்டப்படிப்புப் பற்றிய தலைப்புகளின் விவரம்**

| எண் | தலைப்பு | ஆய்வாளர் பெயர் | ஆண்டு | பல்கலைக்கழகம் |
|---|---|---|---|---|
| 1 | திருஞானசம்பந்தர் திருமுறை : ஓர் ஆய்வு | பாலகிருஷ்ணன் கந்தசாமி | 1988 | மலாயாப் பல்கலைக்கழகம் |
| 2 | மேற்கத்திய தத்துவத்தில் தோமஸ் அகுய்னாஸ் மற்றும் சைவ சிந்தாந்த தத்துவத்தில் மெய்கண்டாரின் இறைச்சிந்தனை : ஓர் ஒப்பாய்வு | பொன்னுசாமி சென்னியப்பன் | 2004 | மலாயாப் பல்கலைக்கழகம் |
| 3 | திருஞானசம்பந்தர் புராணத்தில் இறை : ஓர் ஆய்வு | சிவகுமார் சனியப்பன் | 2005 | மலாயாப் பல்கலைக்கழகம் |
| 4 | சைவநெறியில் ஓரிறைக் கொள்கை : இஸ்லாமிய கண்ணோட்டத்தில் ஓர் ஆய்வுப் பார்வை | சம்சுடின் பின் அம்துல் ஹமிட் | 2012 | இஸ்லாமிய ஆய்வு மையம், மலாயாப் பல்கலைக்கழகம் |
| 5 | பகவத் கீதை மற்றும் திருமுறைகளில் யோகக்கொள்கை | பாலு பெருமாள் | 2013 | மலாயாப் பல்கலைக்கழகம் |
| 6 | பெரியபுராணத்தில் முத்திநிலை | இலங்கேஷ்வரி அர்ஜுணன் | 2018 | மலாயாப் பல்கலைக்கழகம் |
| 7 | சுந்தரமூர்த்தி நாயனார் பாடல்களில் வெளிப்படும் தனிநபர் வளர்ச்சிக்கூறுகளும் மலேசிய நன்னெறிக்கல்வி பாடத்திட்டத்தில் அவற்றின் ஏற்புடைமையும் | சர்மிளா சதாசிவம் | 2019 | மலாயாப் பல்கலைக்கழகம் |
| 8 | திருவாசகத்தில் பதிக்கொள்கை : ஓர் ஆய்வு | வேல்முருகன் கிருஷ்ணா | 2021 | மலாயாப் பல்கலைக்கழகம் |

## அட்டவணை 3: மலேசியாவில் சைவநெறி தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட இளங்கலைப் பட்டப்படிப்புப் பற்றிய தலைப்புகளின் விபரம்

| எண் | தலைப்பு | ஆய்வாளர் பெயர் | ஆண்டு | பல்கலைக்கழகம் |
|---|---|---|---|---|
| 1 | சிவபுராணம், திருவண்டப்பகுதியில் அறிவியல் சிந்தனைகள் | கண்ணன் தட்சிணாமூர்த்தி | 2001 | மலாயாப் பல்கலைக்கழகம் |
| 2 | நால்வர் நெறியின் மகிமை | பத்மாவதி கருப்பையா | 2002 | மலாயாப் பல்கலைக்கழகம் |
| 3 | திருமந்திரத்தில் அறிவியல் | கார்த்திகேஸ் பொன்னையா | 2002 | மலாயாப் பல்கலைக்கழகம் |
| 4 | மலேசிய சைவ சித்தாந்த மன்றம் : ஓர் ஆய்வு | சுமதி லெட்சுமணன் | 2006 | மலாயாப் பல்கலைக்கழகம் |
| 5 | சிவபுராணத்தில் சிவனின் பெருமைகள் : ஓர் ஆய்வு | ரகுநாதன் கணேசன் | 2007 | மலாயாப் பல்கலைக்கழகம் |
| 6 | அற்புதத் திருவந்தாதியில் சிவபெருமானின் திருநாமங்களும் மூர்த்தி பேதங்களும் : ஓர் ஆய்வு | ரேவதி நாகன் | 2009 | மலாயாப் பல்கலைக்கழகம் |
| 7 | காவிரி வடகரைத் தலங்களில் அப்பர் பாடிய பாடல்கள் : ஓர் ஆய்வு | ஸ்ரீ தேவி முத்தையா | 2009 | மலாயாப் பல்கலைக்கழகம் |
| 8 | சைவ சமயத்தில் சிவ வழிபாடும் அதன் சிறப்புகளும் : ஓர் ஆய்வு | லலிதா ஸ்ரீ பரமசிவன் | 2009 | மலாயாப் பல்கலைக்கழகம் |
| 9 | திருவாசகத்தில் சிவபெருமானின் மகேசுவர மூர்த்தங்கள் : ஓர் ஆய்வு | வளர்மதி மணியம் | 2010 | மலாயாப் பல்கலைக்கழகம் |
| 10 | இந்திரா சௌந்தர்ராஜன் நாவல்களில் சிவதத்துவம் : ஓர் ஆய்வு | திலகா ராமசாமி | 2010 | மலாயாப் பல்கலைக்கழகம் |
| 11 | பெரியபுராணத்தில் கண்ணப்ப நாயனார் பக்தித் திறம் : ஓர் ஆய்வு | ஷன்முகபிரியா எள்ளமரன் | 2010 | மலாயாப் பல்கலைக்கழகம் |
| 12 | வள்ளலார் பாடல்களில் திருநாவுக்கரசர் மற்றும் மாணிக்கவாசகரின் தாக்கம் : ஓர் ஆய்வு | லோகாம்பால் சேகர் | 2010 | மலாயாப் பல்கலைக்கழகம் |

| | | | | |
|---|---|---|---|---|
| 13 | சிவலிங்க வழிபாட்டின் சிறப்புகள் : ஓர் ஆய்வு | ஜெயப்பிரதா வீரன் | 2011 | மலாயாப் பல்கலைக்கழகம் |
| 14 | சிவபுராணத்தில் தளையியல் சிந்தனைகளும் மலேசிய சமய ஆசிரியர்களின் அதன் புரிதலும் ஓர் ஆய்வு | வாசுதேவன் இலக்குமணன் | 2021 | சுல்தான் இட்ரிசு கல்வியியல் பல்கலைக்கழகம் |

**அட்டவணை 4: மலேசியாவில் சைவநெறி தொடர்பாக தமிழ்ப்பேராய்வு ஆய்விதழில் வெளிவந்த ஆய்வுக்கட்டுரைகளின் தலைப்புகளின் விபரம்**

| எண் | தலைப்பு | ஆய்வாளர் பெயர் | தொகுதி | ஆண்டு |
|---|---|---|---|---|
| 1 | பெரியபுராணத்தில் சரியை | இலங்கேஷ்வரி அர்ஜூணன் | 1 | 2015 |
| 2 | பெரிய புராணத்தில் வெளிப்படும் பக்தி நெறி | குமரன் இராமையா | 1 | 2015 |
| 3 | சுந்தரரின் மிஞ்சு மொழியும் அதன் உட்பொருளும் | சர்மிளா சதாசிவம் | 4 | 2016 |
| 4 | திருவிசைப்பாவில் இறைவன் திருநாமச்சிறப்பு: ஓர் ஆய்வு | முனைவர் சீதா லட்சுமி இராதாகிருஷ்ணன் | 6 | 2017 |
| 5 | பெரிய புராணம் உணர்த்தும் குரு, லிங்க, சங்கம வழிபாட்டில் திருமந்திரம் காட்டும் சான்றுகள் | திலகவதி இராஜகோபால் & சரவணன் முத்துராமலிங்கம் | 9 | 2020 |
| 6 | பெரிய புராணத்தில் பக்தி | அகல்யா தர்மலிங்கம் & முனைவர் தர்மலிங்கம் நடராஜன் | 9 | 2020 |
| 7 | சித்தர் பாடல்களில் சைவ சித்தாந்தத்தின் சாயல் | முனைவர் சிவபாலன் & முனைவர் மணிமாறன் | 10 | 2021 |

**அட்டவணை 5: கோலாலம்பூரில் நடைபெற்ற இரண்டாம் அனைத்துலக சைவ சித்தாந்த மாநாட்டுக் கட்டுரைகளின் தலைப்புகள் (1986)**

| எண் | தலைப்பு | ஆய்வாளர் பெயர் |
|---|---|---|
| 1 | Siva and Siva Worship | Dr. S.S. Janaki. |
| 2 | A Siddhanta Critique of Vedanta | K. Loganathan Mutharayan |
| 3 | சைவ சமயமே சமயம் | Dr. ப. சௌரிராஜன் |
| 4 | Saivism and Tirukkural | E.V. Singam |
| 5 | மலேசியாவில் சைவ சமயத்தின் நிலை | எஸ். இராமகிருஷ்ணன் |
| 6 | Saiva Siddhanta: Dual/Non-Dual | Saiva Siddhanta Church International (Hawaii) |
| 7 | சைவசித்தாந்தத்தில் வினை | பாமகள் பாலசிங்கம் |

| | | |
|---|---|---|
| 8 | Experience and Systematisation: Two Aspects of the Saiva Tradition | V. Ramakrishnan |
| 9 | The concept of guru in Saiva Siddhanta | M. Thomas Thangaraj |
| 10 | சைவ சித்தாந்தம்: சாதனையும் பயனும் | வீ. சீனிவாசகம் |
| 11 | Saivite devotional literature in Tamil and Kannada | Dr. T.B. Siddhalingaiah |
| 12 | 'Identity-in-difference' in the light of Saiva Siddhanta | Dr. S. Gangadaran |
| 13 | Saiva Siddhanta : a study of northern tradition | A. V. Jeyachandran |
| 14 | The Svetasvatara Upanisad and Saiva Siddhanta | Dr. Devapoopathy Nadarajah |
| 15 | முத்தி இலக்கணம் | ஆ. திருமுகம் |
| 16 | Metaphysics of Saiva Siddhanta with Special Refrences to Maidens' Reveile | Dr. C.K. Mahadevan |
| 17 | திருக்குறளில் சைவ சித்தாந்தம் | எம். வி. ஜயராமன் |
| 18 | Conception of God in Saiva Siddhanta and christianity | S. Gangadaran |
| 19 | சித்தியரின் சித்தாந்த முத்தி | கு. பஞ்சாஷரம் |
| 20 | திருக்கூத்தும் திருவைந்தெழுத்தும் | Dr. க. திலகவதி |
| 21 | திருவருட்பயனில் பதிமுது நிலை | கு. சொக்கநாதன் |
| 22 | சித்தாந்த முத்தி | Dr. ந. வீ. செயராமன் |
| 23 | சங்க இலக்கியத்தில் சைவசித்தாந்தம் | Dr. ச. சாம்பசிவம் |
| 24 | சைவசித்தாந்தத்தில் திருக்குறளின் அடிச்சுவடுகள் | மு. சுப்பிரமணியம் |
| 25 | பரமுக்தியின் இலக்கணமும் திருவடிப் பேற்றின் நிலைகளும் | எஸ். நாகலிங்கம் |
| 26 | காஞ்சிபுராண உவமைகளில் சைவசித்தாந்தம் | Dr. இரா. தண்டாயுதம் |
| 27 | பதிக் கொள்கை: சைவசித்தாந்தம் விசிட்டாத்துவம்: ஓர் ஒப்பீடு | அ. இராமரத்தினம் |
| 28 | Pluralistic Connection between Saiva Siddhanta and Bhagavad Gita | V. K. Palasuntharam |
| 29 | Saiva Siddhanta, Science and Taoism | Dr. C.E. Sooriamoorthi |
| 30 | Experience and systematisation - two aspects of the saiva tradition | V. Ramakrishnan |